ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2420/ 37 - 2025 ජනවාරි මස 22 වැනි බදාදා - 2025.01.22
2420/37 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

39 (1) ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்தல்

காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட 2014.11.07 ஆந் திகதிய 1887/41 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டின் 308 ஆம் இலக்க 2014.10.31 ஆந் திகதிய கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்ட காணித்துண்டின் இருப்பாட்சியை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சார்பில் இன்னும் பொறுப்பேற்கப்படவில்லை. ஆகையால், கமத் தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், காணி எடுத்தற் சட்டத்தின் 39(1) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் 2014.11.07 ஆந் திகதிய 1887/41 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டின் 308 ஆம் இலக்க 2014.10.31 ஆந் திகதிய இக் கட்டளையை இத்தால் இரத்துச் செய்கின்றேன்.

கே. டி. லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இல. : 4 - 3/10/2012/LRB/324.
பிரதேச செயலாளர் இல. : WGSWD&EIP/ ACQ/KB/16.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும்
நீர்ப்பாசன அமைச்சு,
"மிஹிகத மெதுர",
இல. 1200/6, காணிச் செயலகம்,
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2025, சனவரி 08.

#### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில் 576A - தும்போவில வடக்கு கிராம அலுவலர் பிரிவில் தும்போவில (பிரிவு இல. 10 -


*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

தும்போவில, கெஸ்பேவ நகர சபை எல்லலையினுள்) கிராமத்தில் அமைந்துள்ள,நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2024.08.30 ஆந் திகதிய CO/DSO/2024/98 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் எல்லைகள் :

**01. துண்டு 'B' – தூவவத்தை - விஸ்தீரணம் : 0.0887 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு A, க. வ. 521203 தொகுதி 16 தாள் 2 இல் துண்டு இல. 114, தாள் 1 இல் துண்டு இல. 53 மற்றும் தாள் 2 இல் துண்டு இல. 111 ; கிழக்கு : க. வ. 521203 தொகுதி 16 தாள் 2 இல் துண்டு இல. 114, தாள் 1 இல் துண்டு இல. 53 மற்றும் தாள் 2 இல் துண்டு இல. 111, 110 மற்றும் 109 ; தெற்கு : க. வ. 521203 தொகுதி 16 தாள் 2 இல் துண்டு இல. 109, 93 மற்றும் 113 ; மேற்கு : க. வ. 521203 தொகுதி 16 தாள் 2 இல் துண்டு இல. 113, 93 மற்றும் இந்த வரைபடத்தில் துண்டு A.

EOG 01 - 0223

---

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2014, நவெம்பர் மாதம் 07 ஆந் திகதிய 1887/41 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460)காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டின் 308 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிட்ட காணித்துண்டுகளினை முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக்காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும், அச்சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், குறித்த காணித்துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டினை இக்கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

கே. டி. லால் காந்த
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இல. : 4 - 3/10/2012/LRB/324.
காணி எடுத்தல் உத்தியோகத்தர் இல. : WGSWD&EIP/ ACQ/ KB/16.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும்
நீர்ப்பாசன அமைச்சு,
"மிஹிகத மெதுர",
இல. 1200/6, காணிச் செயலகம்,
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2025, சனவரி 08.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில் 576A - தும்போவில வடக்கு கிராம அலுவலர் பிரிவில் தும்போவில கிராமத்தில் அமைந்துள்ள,நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப் பட்ட 2016.05.23 ஆந் திகதிய, 521203 ஆம் இலக்க கடத்திரல் வரைபடத்தில் தொகுதி இல. 17 இல் 02 தொகுதி. தாள் இல. 04 இல் விபரமாக காட்டப்பட்டுள்ள பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித்துண்டின் எல்லைகள் :

**01. துண்டு இல. 522 – மாவீகொட்டுவ - விஸ்தீரணம் : 0.0244 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 523 ; கிழக்கு : துண்டு இல. 520 ; தெற்கு : துண்டு இல. 521 ; மேற்கு : துண்டு இல. 530.

EOG 01 - 0224